# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

## Tamilnadu Electricity Board Accounts And Executive Staff Union

(Regd.No.2472) (Recognised) Head Quarters:Chennai

(Affiliated With Public Service International)

E-mail: tnebaesunion@gmail.com Phone: 044-2852 0060 (Fax)

WEB : tnebaesu.net 044-2852 0131 Extn:2881

**S.Nagarajan** President | **K.Chandra Sekaran,B.A.,** General Secretary | **B.Tyagarajan,M.Com.,** Finance Secretary

**P.Anbalagan, S.Abuthayar** Vice Presidents | **S.Mahalingam, N.Ganesan** Joint Secretaries | **B.Gopalakrishnan** Organising Secretary, | **C.Suganthi** State Women Secretary

Hall No.7,MLDC Building 1st Floor,TNEB Complex,No.144,Anna Salai,Chennai-600 002.

**Assistant General Secretary**

E.Sithaiyan,
Chennai

**Reginal Secretary**

M.Nagarajan,
Coimbatore.

M.K.Purushothaman,
Chennai/South.

S.Ayyamperumal,
Nellai.

B.Gopalakrishnan,
Erode.

S.Abuthayar,
Maduai.

M.Liyakath Ali,
Trichy.

R.Pandian,
Vellore.

R.Venkatapathy,
Villupuram.

M.Susairaj,
Chennai/North.


கடித எண்: 50/19
12.03.2019

பெறுநர்,
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2

பெருமதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: நிர்வாகம் - களப்பணி தொகுப்பு – கேங்மேன் என்ற புதிய பொறுப்பு உருவாக்கம் - சம்மந்தமாக.

பார்வை:
1. (Per) FB.TANGEDCO Proceedings No:10 (Secretariat Branch) dt:06-03-2019.
2. Notification No:1/2019, dt: 07-03-2019.

********

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் ஏற்கனவே களப்பிரிவு தொகுப்புக்கு என பல்வேறு பொறுப்புகள் உருவாக்கப்பட்டு அவைகளுக்கு பணி ஒதுக்கீடு மற்றும் பொறுப்புகள் எண்ணிக்கை (Work Allocation and Staff Pattern) வேலை பளு ஒப்பந்தங்கள் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது. இறுதியாக இதுகுறித்து வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே கடந்த 22-02-2018 அன்று தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)-ன் கீழ் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டு அது சம்மந்தமான வாரிய ஆணை (Per) FB.TANGEDCO Proceedings No:8 (Secretariat Branch) dt:02-03-2018 மூலம் வழங்கப்பட்டு அமுலில் உள்ளது.

இந்நிலையில் களப்பிரிவு பணி தொகுப்பில் புதிதாக கேங்மேன், சீனியர் கேங்மேன், சீப் கேங்மேன் என புதிய பொறுப்புகளை உருவாக்கி வாரிய ஆணை வெளியிடப்பட்டு உள்ளது. இந்த புதிய பணி பொறுப்புகள் எங்கு எப்படி பயன் படுத்தப்படவுள்ளது. அதற்கான பணி ஒதுக்கீடு மற்றும் பொறுப்புகள் எண்ணிக்கை (Work Allocation and Staff Pattern) போன்ற எந்த விவரங்களும் மேற்படி உத்திரவில் தெரிவிக்கப்படவில்லை. மேலும் வேலை பளு ஒப்பந்தத்திற்குட்பட்ட ஒரு பணி தொகுப்பான களப்பிரிவு பணி தொகுப்பில் இவ்வாறு புதிய பொறுப்புகளை உருவாக்குவதற்கு

முன் தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி ஒப்பந்தத்தையோ அல்லது புரிந்துணர்வையோ ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் தொழிற்சங்கங்களோடு எந்தவித பேச்சு வார்த்தையினையும் நடத்திடாமல் இந்த உத்திரவு தன்னிச்சையாக வெளியிடப்பட்டு உள்ளது என்பதை முதலில் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 01-07-1957ல் உருவாக்கப்பட்டதிலிருந்து தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வரும் ஊழியர்களை நிரந்தரப்படுத்தி களப்பிரிவில் பயன்படுத்தி கொள்ளும் நடைமுறைகள் கடந்த 62 ஆண்டுகாலமாக பின்பற்றி வரப்படுகிறது. இந்த நடைமுறைப்படித்தான் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட NMR, Work Charged பணியாளர்களும், நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட தினக்கூலி தொழிலாளர்களும், காலீத் கமிஷன் மூலம் 18006 ஒப்பந்த தொழிலாளர்களும், 10-08-2007ல் 12(3) ஒப்பந்தத்தின் மூலம் 21600 ஒப்பந்த தொழிலாளர்களும் வாரியத்தில் பணிநிர்ந்தரப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த கடந்த கால நடைமுறைகளுக்கு மாறாக மேற்கண்ட புதிய பொறுப்பான கேங்மேன் பொறுப்புக்கு 5000 பேரை வெளிமுக நேரடி தேர்வின் மூலம் (Direct Recruitment) தேர்வு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே பின்பற்றி வரப்படும் இந்த நடைமுறைகளுக்கு புறம்பானது என்பதையும் சுட்டிகாட்ட விழைகின்றோம்.

Chit Agreement மற்றும் PCB மூலமாக கூலித் தொழிலாளர்களாக பணிபுரிந்து வரும் பலர் தங்களை நிரந்தரப்படுத்திடக்கோரி The Tamil Nadu Industrial Establishments (Conferment of Permanent Status to Workman) Act 1981-ன்படி மாநிலம் முழுவதும் உள்ள தொழிலாளர் ஆய்வாளர்களிடம் (Inspector of Labour) வழக்கு தொடுத்து அவர்களை நிரந்தரப்படுத்திட வேண்டும் என உத்திரவினை பெற்று வைத்துள்ளனர். இவ்வாறு தொழிலாளர் அலுவலரால் வழங்கப்படும் உத்திரவு செல்லதக்கது என சென்னை உயர்நீதிமன்ற ஒரு நீதிபதியும், இரண்டு நீதிபதிகளை கொண்ட அமர்வும் மற்றும் உச்ச நீதிமன்றத்திலும் தீர்ப்புகள் வழங்கப்பட்டு அந்த தீர்ப்புகளை வாரிய நிர்வாகமும் அமுல்படுத்தி அவர்களை வாரியத்தில் பணி அமர்த்தியுள்ளது.

ஆனால் இதுபோன்று அண்மையில் தொழிலாளர் ஆய்வாளர்களால் வழங்கப்பட்டுள்ள உத்திரவுகளின் மீது வாரிய நிர்வாகம் மேல்முறையீடுகள் செய்து அதுசம்மந்தமான வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்றது. இவைகளில் ஒரு சில வழக்குகளின் மீது சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் மேன்மைமிகு எஸ்.எம்.சுப்பிரமணியன் அவர்கள் கடந்த 24-04-2018 மற்றும் 25-04-2018 நாட்களில் பல்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளார். அவைகளில் வாரிய உத்திரவு B.P(Chairman)No:9 (Administrative Branch) dt:09-01-2008ல் வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதல்கள்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. இத்தீர்ப்புக்கு உட்பட்ட பல்வேறு கூலித்தொழிலாளர்களிடம் விவரங்கள் கோரி பெறப்பட்டு அவைகள் இது சம்மந்தமான கமிட்டிகளின் முன்னிலையில் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

தற்போது K.2.Agreement மற்றும் சில வகைகளில் வாரியத்தில் பல ஆயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். **தானேபுயல், ஒக்கிபுயல்** மற்றும் அண்மையில் கோர தாண்டவம் ஆடிய **கஜாபுயல்** ஆகியவைகளால் மின்கட்டமைப்பில் ஏற்பட்ட சீர்குலைவுகளை புனரமைக்கின்ற பணியில் மேற்கண்டவாறு பணிபுரிந்து வரும் ஒப்பந்த தொழிலாளர்களின் பங்களிப்பு பாராட்டதக்கது என தமிழகஅரசும், வாரிய நிர்வாகமும், ஊடகங்களும் குறிப்பாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் வெகுவாக பாராட்டியுள்ளனர். மேலும் மின்துறை அமைச்சர் அண்மையில் கலந்து கொள்ளும் ஊழியர்சங்க மாநாடுகளிலும், பொதுநிகழ்ச்சிகளிலும்

இதை நினைவு கூர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வருடன் கலந்து பேசி ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்து வருகின்றார். இந்நிலையில் பார்வை 1, 2ல் குறிப்பிட்டுள்ள உத்திரவுகளும் அறிவிப்பும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற மின்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளுக்கு முரண்பட்டதாகவுள்ளது.

1967ல் ஆட்சி கட்டிலில் அமர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிற்சங்கங்கள் வைத்தகோரிக்கைகளை ஏற்று மின்சார ஊழியர்களுக்கு சாதகமாக வழங்கப்பட்ட தொழிலாளர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களுக்கு எதிராக வாரியம் தொடுத்திருந்த மேல் முறையீடு வழக்குகளை திரும்ப பெற்றுக்கொண்டு தொழிலாளர்களுக்கு சாதகமான தீர்ப்புகளை அமுல்படுத்திட ஆணைபிறப்பித்து அன்று தொழிலாளர்களின் நல்வாழ்வு பேணப்பட்டது. அந்த அடிச்சுவடியினை பின்பற்றி அமைந்துள்ள தமிழக அரசும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள மேல் முறையீடு வழக்குகளை திரும்பப்பெற்று நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டு கமிட்டியின் முன்உள்ள ஒப்பந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளிலும் சுமுகமான தீர்வினை ஏற்படுத்தி அதில் சம்மந்தப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களையும் மற்றும் தற்போது K.2.Agreement மற்றும் பல்வேறு வகைகளில் வாரியத்தில் பணிபுரிந்து வரும் ஒப்பந்த தொழிலாளர்களையும் அடையாளம் கண்டு கடந்தகால நடைமுறைகளின்படி பணிநிரந்தரப்படுத்திட வேண்டுகின்றோம்.

இவ்வாறு மேற்கண்ட ஒப்பந்த தொழிலாளர் பிரச்சினைகளில் ஒரு நியாயமான தீர்வு காணாமல் பார்வை 1, 2ன் மூலம் குறிப்பிட்ட ஆணை மற்றும் அறிவிப்பு வாயிலாக உருவாக்கப்பட்டுள்ள கேங்மேன் பணி நியமனத்தை வெளிமுக நேரடி தேர்வின் மூலம் நியமித்திட்டால், சம்மந்தப்பட்ட மேற்கூறிய ஒப்பந்த தொழிலாளர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு விடுவார்கள் என்பதையும், அதன் மூலம் இங்கு தொழில் அமைதி சீர்குலைந்து சில சட்டப் பிரச்சினைகளும் உருவாகிவிடும் என்பதனையும் வாரிய நிர்வாகத்திற்கு சுட்டி காட்டிட விழைகின்றோம்.

எனவே வெளிமுகத்தேர்வு மூலம் கேங்மேன் என்ற பொறுப்புகளை நிரப்ப முற்படும் நடவடிக்கையினை கைவிட்டு இப்பிரச்சனை குறித்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி உடன்பாடு கண்டிட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

(க.சந்திரசேகரன்)
பொதுச்செயலாளர்

நகல் :
1. இயக்குநர் /மின்விநியோகம் /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
2. இயக்குநர் /மின்உற்பத்தி /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
3. இயக்குநர் /மின்கடத்தல் /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
4. இயக்குநர் / நிதி /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
5. செயலாளர் /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
6. தலைமைப்பொறியாளர் /பணி அமைப்பு/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
7. தொழில் உறவு அலுவலர் /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.